Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி தை 13 ஆம் நாள் நம்மான் மீனம் 22 (26 i 65) செவ்வாய்க்கிழமை இதழ் 347

யாழ். பஸ் நிலையம் கட்டாய சுவீகரிப்பு

போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளதாம்

பிரயாணிகள் சம்மேளனத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தைக் கட்டாயமாக சுவீகரிப்பதற்கு மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 25-வது பிரிவின் 1-வது விதியின்கீழ் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்திருப்பதாக அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளன பஸ் பிரயாணிகள் சம்மேளனத்தின் தலைவர் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் தெரிவிக்கிறார்.

பஸ்பிரயாணிகள் சம்மேளனம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின் நிலை சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சிடமும் போக்குவரத்து சபையிடமும் எடுத்துக்கூறியதாகவும் பஸ் நிலைய மாற்றங்களினால் வரிசிறுப்பாளர்களுடைய பணம் வீணாக்கப்படுகிறதாகவும் சுட்டிக்காட்டியதாம்.

சம்மேளனத்தின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்த போக்குவரத்து அமைச்சு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை கட்டாயமாகச் சுவீகரிக்கத் தீர்மானித்திருப்பதாக அறிவித்துள்ளதாக திரு. அருமைநாயகம் கூறினார். நவீன பஸ் நிலையத்துக்கான வசதிகளும் செய்யப்பட்ட அமைச்சு சமமதமளித்திருக்கிறதாம்.

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

சிறுவர் சிறுமியரின் 23 ரூபாய் நிதி உதவி

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்காக பருத்தித்துறை வியாபாரிமூலை ஜயபதி சிறுவர் - சிறுமியர் தாம் சேகரித்து வைத்திருந்த 23 ரூபாவையும் அளித்துள்ளனர். அவர்கள் அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:

நேற்றைய ஈழநாட்டில் ஐயாறன் எழுதியிருந்ததை வாசித்த போது எங்கள் மனம் மிகத் துன்பத்திலாழ்ந்தது. நாங்களாவ்வளவோ சிறிது சிறிதாகச் சேமித்து வைத்திருந்த இத்தொகையையும் புயல் கஷ்டநிவாரண நிதிக்காக அளிக்க விரும்புகிறோம். இச் சிறுத் தொகையையும் புயல் கஷ்டநிவாரண நிதியுடன் சேர்த்து பயன்படுத்துமாறு வேண்டுகிறோம்" என்று கருக்கமாக எழுதியுள்ளனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை வரை 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்காகக் கிடைத்த பணமும் பொருள்களின் பெறுமதியும் மொத்தம் 17,908 ரூபா 16 சதம் கேற்றுப் பிற்கல் வரை கிடைத்தவுள் விபரம் வருமாறு:

காரைநகர் சைவமகாசபை	— 10-00
ஏ. முருகேசு, 1-ம் கடை வரணவடி, காரைநகர்	— 05-00
அன்னமலை இலக்கத் தமிழ் மன்றம், யாழ்ப்பாணம்	— 60-00
பி. மூர்த்தி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி	— 10-00
ஜெயபதி சிறுவர் - சிறுமியர் வியாபாரிமூலை, பருத்தித்துறை	— 23-00

கருதிலை தோமஸ் கூரே

கொழும்பு, திங்கள் 64 வயதுடைய கொழும்பு ஆர்ச்பிஷப் தோமஸ் கூரேயை போப்பாண்டவர் பால், கருதினாலாக நியமித்திருக்கிறார். பெப்ரவரி 22-ம் திகதி நியமனவைபவத்தை போப்பாண்டவர் நிறைவேற்றுவார். கருதினாலாக நியமிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் தோமஸ் கூரே ஆகும். கொழும்பு சென். ஜோஸப் கல்லூரியில் பயின்றபின் ரோமாபுரியில் பட்டம் பெற்றார்.

இசைத்தமிழ் மன்றம் உதவி

"சூறாவளியால் கஷ்டப்படும் மக்களுக்கு குறிப்பாக சாப்பிட உணவின்றி அல்லலுறுவர்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று எமது கல்லூரி விடுத்த கோரிக்கைக்கிணங்க ஐந்து வயது முதல் பதினெட்டு வயது வரையுள்ள எங்கள் கல்லூரியில் பயிலும் சகல மாணவர்களும் ஆசிரியர்களும் மனமுவந்து இத்தொகையை அளித்துள்ளனர். இப்பணத்தை இந்தியர் - இலங்கையர் என்ற பேதம் பார்க்காது, கஷ்டப்படும் மக்களுக்கு உதவுங்கள்" என்று

(6-ம் பக்கம் பார்க்க)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணமும், பொருளும் உதவி

'ஈழநாடு' நிவாரண உதவிச்சபையினர் அழங்கினர்

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மயிலிட்டி, பலாலி, வசாவிளான் மக்களுக்கு 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரணநிதிச் சபை சார்பாக டாக்டர் கே. கனகரத்தினம், திருவாளர்கள்: எம். கனகசபை, வி. ராஜசேகரம் வி. கந்தசாமி ஆகியோர் சென்றாண்டிக்கிழமை நேரிலசென்று தலைவர் கனகரத்தினம் சில குடும்பங்களுக்கு பணமாகவும், பொருளாகவும் உதவினர். உதவி பெற்றோர் விபரம் வருமாறு:

பி. ராஜசிங்கத்தின் தகப்பன் பராராஜசிங்கம் — 20 ரூபா.

எஸ். கந்தசாமி கைம்பெண் காந்தமணி 5 பிள்ளைகள் — 30 ரூபா.

எம். சின்னராசாவின் கைம்பெண் 2 பிள்ளைகள் — 30 ரூபா.

ஐ. ஆனந்தவேலின் தாய் பூரணம் 5 பிள்ளைகள் — 40 ரூபா.

எம். இராமசாமியின் மகன்

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறையில் திடீர் தீ விபத்து

இரு வீடுகள் நாசம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறையில் பட்டப்பகலில் இரு வீடுகள் இன்று தீக்கிரையாயின. இன்று காலை பத்தரை மணியளவில் இரு வீடுகளும் திடீரெனத் தீ பிடித்தன.

காங்கேசன்துறை பிரதான வீதியில் வசிக்கும் வேலன் காசிநாதன், வேலன் வயிரமுத்து ஆகிய இருவரின் வீடுகளுமே தீக்கிரையாயின. வீட்டின் சில தளபாடங்களும் முற்றாக எரிந்து சாம்பராகின. ஆடு ஒன்றும் இத் தீயில் எரிந்து சாம்பலாயிற்று.

திடீரெனப் பிடித்த தீயினால் பெரும் நஷ்டத்தினாளான இரு வீட்டின குடும்பங்களுக்கும் வேண்டிய நிவாரண உதவியளிப்பதில் ஊர் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தீ மற்றைய வீடுகளுக்குப் பரவாமல் இளைஞர்கள் தீயை [illegible] ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த விபத்தினால் இரண்டாயிரம் ரூபாவரை நஷ்டமேற்பட்டிருக்குமென நம்பப்படுகிறது.

ஹிந்தி எதிர்ப்பு

மதுரையில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

பந்தலுக்கும் ஜீப்புக்கும் மாணவர்கள் தீயிட்டனர்

சென்னை, ஜன. 25

நாளை ஹிந்தி ஆட்சிமொழி யாவதை எதிர்த்து இன்று சென்னையில் 5000 கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். 11 மாணவர்கள் கைதாகினர்.

உண்ணாவிரதம் இருக்க முயன்ற 16 'நாம் தமிழர்' ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மதுரையில் குடியரசுக் கொண்டாட்டத்திற்காக அமைக்கப்பட்ட பந்தலுக்கு மாணவர்கள் தீயிட்டனர். ஒரு பொலிஸ் ஜீப்புக்கும், 8 சைக்கிள்களுக்கும் அவர்கள் தீயிட்டனர். பொலிசார் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க எண்ணிப் புகை பிரயோகம்செய்தனர். 2 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

திருச்சி, சிதம்பரம் ஆகிய நகரங்களிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்செய்தனர்.

போட்டி ஐ. நா ஸ்தாபனம் ஏற்படக் கூடுமாம்

சீனப் பிரதமர் கூற்று

பீகிங், ஜன. 29

ஐ. நா. ஸ்தாபனம் அமெரிகாவினால் ஆதிக்கம்செலுத்தப்பட்டு வருகிறதென்றும், எனவே புதிய புரட்சிகர ஐ. நா. ஒன்று நிறுவப்படக்கூடுமென்றும் சீனப் பிரதமர் சூ என்-லாய் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி சுபந்திரியோவுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கு ஐ. நா. ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது. உலகத்தின் காலிவாசிக்கும் அதிக மான ஜனத்தொகையைக் கொண்ட சீனா, வடகொரியா, வடவியட்நாம் ஆகிய நாடுகளுக்கு ஐ. நா.வில் இடமில்லை. காங்கோ போன்ற நாடுகள் சுதந்திரத்தை இழந்து ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது என்றும் சீனப் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் புரட்சிகர மான ஐ. நா. ஸ்தாபனம் ஏற்படக்கூடுமென்றும் அவர் கூறினார்.

6-ம்பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவரிக்கு

எந்த ஆசைக்கும் அடிமைப்பட்டவருக்கு அமைதியோ, சுதந்திரமோ எப்போதுமிராது. கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதில் ஏற்படும் இன்பம் உண்மையில் தெய்வீக இன்பம்.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna. Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தை மீ 13 உ (26-1-65)

திருடர் தொல்லை

யாழ்ப்பாணப் பகுதியில் சமீபகாலத்தில் அதிகரித்து வந்துள்ள திருட்டு, வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதில் யாழ்ப்பாணப் பொலிசார் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இது பாராட்டவேண்டியதேயெனினும் திருடர் தொல்லையை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எவ்வித அலுவலுமின்றி இரவு நேரங்களில் வீதிகளில் நடமாடித் திரிந்த சிலரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். இது போதாது. இரவில் மட்டுமல்ல பகலிலும் இப்பொழுது வழிப்பறிகளும் திருட்டுக்களும் நடைபெறுகின்றன. சமீபத்தில் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய ஒரு சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியை திருடன் ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடமுயற்சித்தபோது சிறுமியின் துணிச்சலும் அயலவரது உதவியும் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க உதவின. இது ஒரு சம்பவம். இன்னும் எத்தனையோ சம்பவங்களில் திருடர்கள் பிடிபட்டுள்ளனர். மற்றும் பல சம்பவங்களில் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர். திருட்டையும் வழிப்பறிகளையும் தடுப்பதற்கும் ஒழிப்பதற்கும் பொலிசாரை மட்டும் நம்பியிருப்பது சரியாகாது. பொதுமக்கள் தங்கள் பணத்தையும் பொருளையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது மிக முக்கியம். அவளக் குறைவாகப் பணத்தையும் பொருளையும் வைப்பதன்மூலம் திருடர்களுக்கு வாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாது புதிய திருடர்களையும் பொதுமக்கள் உருவாக்கிவிடுகின்றார்கள்.

இதுதவிர திருடர் தொல்லையை ஒழிப்பதற்குப் பொதுமக்கள் பொலிசாருடன் ஒத்துழைக்க வேண்டியதும் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொலிசார் பெறவேண்டியதும் மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு கிராமங்களிலும், வட்டாரங்களிலும் தொண்டர் படை அல்லது ஊர்காவற்படை திரட்டி இரவிலும் மற்றும் வேளைகளிலும் வீதிகளில் ரோந்து சுற்றி சந்தேகாஸ்பதமான பேர்வழிகளின் நடமாட்டத்தைக் கவனித்துத் திருட்டு, வழிப்பறிக் கொள்ளைகள் மட்டுமல்லாது இதர சமூக விரோதச் செயல்களையும் ஒழித்துக் கட்டலாம். முன்னர் பல சமயங்களில் தொண்டர்படை, ஊர்காவற்படைகளில் சில விஷமிகள் உட்புகுந்து அதன் நோக்கத்தையே கெடுத்ததுமன்றி வேலியே பயிரை மேய்ந்த கதையாகவும் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. எனவே 'ஊர்காவற்படை'களிலும் 'தொண்டர்படை'களிலும் நேர்மையானவர்கள் இடம்பெற வேண்டும். பொலிசாரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்று திருட்டு, வழிப்பறிக் கொள்ளை ஆகியவைகளை ஒழித்துக்கட்ட பொதுமக்களே முனைவர வேண்டும்.

இன்று

இந்தியாவின் பதினாறுவது குடியரசு தினம்



இன்று இந்தியாவின் 16-வது குடியரசு தினம்.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலைபெற சரித்திர காலந் தொட்டே பல தியாகிகளும், பெரியார்களும் போராடி வந்தார்களெனினும் அண்ணல் காந்தி நடத்திய அஹிம்சை சுதந்திரப் போராட்டத்திற்கு அதிக சக்தி இருந்தமையால் இந்தியா சுதந்திர மடைந்தது எனக் கூறலாம். அண்ணல் காந்தி மறைந்ததைத் தொடர்ந்து சோஷலிச சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதில் பெரும்பாடுபட்டு வெற்றி கண்டவர் அமரர் நேரு. அவரில்லாமல் இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்திய சுதந்திரம் பெற்றது 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் திகதி. ஆனால் குடியரசாக 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ம் திகதி பிரகடனம் செய்யப்பட்டது. இந்தியாவுக்கு ஒருவருட காலம் பின்னர் சுதந்திரம் அடைந்த நமது இலங்கை இன்னும் குடியரசாகவில்லை!

அரசியலமைப்பு

இந்திய அரசியலமைப்பு சாஸனம் உலகின் மிகச்சிறந்த அரசியல் சாஸனமாக கருதப்படுகிறது. சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை, சிறுபான்மைத்திற்கு எதிரான உரிமை, மத சுதந்திர உரிமை, கலாச்சார கல்வி உரிமைகள், சொத்துரிமை முதலிய அடிப்படையுரிமைகளைத் தன்னகத்தே கொண்ட சிறப்பு இந்திய அரசியல் சாஸனத்துக்கு உண்டு.

சுதந்திரத்தின் பின்

தேசத்துக்கு சுதந்திரமை பெற்ற பின்னர் இந்திய மக்களிடையே ஒரு புதிய மனோபாவம் ஏற்படலாயிற்று. பொலீஸ் இராச்சியத்துக்கு பதிலாக ஏற்பட்ட நலவிருத்தி ஆட்சி பெரிதான அடிப்படையில் விரிவான ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தது. ஜனநாயக சோஷலிச சமுதாயம் ஒன்றை பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் அமைப்பதில் கடந்த பதினைந்து வருடங்களாக அமரர் நேரு தலைமையில் நடைபெற்ற பணி திரு. சாஸ்திரியின் தலைமையிலும் நடைபெறுகின்றன.

ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் விவசாயம், கைத்தொழில், தொழிலாளர் நலம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் இந்தியா பெரும் முன்னேற்றமடைந்துள்ளது. கண்கூடு. நாளுக்குநாள் இந்தியாவின் தொழிலாளர் நலத்திற்கு பெருகிக் கொண்டு வருவதை நம்மால் அவதானிக்க முடிகிறது. மிக விரைவில் அது ஒரு தொழிலாளர் நலம் கொழிக்கச் செல்வ நாடாக மிளிரும் என்பதைச் சந்தேகத்துக்கிடமில்லாமல் சொல்ல வைக்கிறது. அவர்களது தொழிலாளர் நலம் முன்னேற்றம். திட்டமிட்ட செயலினால் இந்தியா மேலும் மேலும் முன்னேறி வரும் என நம்பலாம்.

இலங்கைஇந்திய உறவு

நேரு இல்லாவிட்டாலும் இந்தியாவுக்கும் அதன் அயல் நாடான இலங்கைக்கும் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படும் என்று அச்சம் ஏற்பட்டபோதிலும் செய்கைகளும் கொள்கைகளும் நேரு இருந்த காலத்தில் இருந்தவாறே நடைபெற்றுவருகின்றன எனலாம். பலகாலமாக தவிர்க்கப்பட்டு வந்த சிக்கலான இந்திய இலங்கையர் பிரச்னை சாஸ்திரி சிறிமாவோ ஒப்பந்தம் மூலம் இரு நாடுகளுக்குமுள்ள தொடர்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதுதவிர கடந்த வாரம் கையெழுத்திட்ட வர்த்தக ஒப்பந்தமும் இருநாடுகளுக்குமிடையிலுள்ள பிளவை மேலும் குறைத்துள்ளது. இந்த ஒப்பந்தங்களினால் பல விதமான தப்பபிப்பிராயங்கள் எழுந்துள்ளபோதிலும் அண்மையில் ஏற்பட்ட புயல் இயற்கையாலும் பூமிசுத்திர அமைப்பாலும் இரண்டு நாடுகளும் ஒன்று என்பதை பிரதிபலிக்கின்றது. வறுமை, பசிக்கொடுமை, யுத்தம் முதலிய இந்தியாவிற்கும், இலங்கைக்கும் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கும் பெரும் சவால்விடுத்துக்கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் பரஸ்பர நம்பிக்கையுடனும், திறந்தமனத்துடனும் அணுகி ஆராய வேண்டியது அவசியமாகும்.

"சுயநலம் உள்ளவரை முன்னேற்றம் இருக்காது"

இளந்தமிழர் மன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் பேச்சு

"நாடு மேலோங்க என்ன மொழி மறைந்தால் என்ன இனம் அழிந்தால் என்ன நான் மட்டும் முன்னேறினால் போதும் என்ற நிலையில் இன்றைய இளைஞர் சமுதாயம் வாழ்வது மிகவும் வெட்கப்படத்தக்க விஷயமாகும். இப்படியான சுயநலம் உள்ளவரை நாம் என்றுமே முன்னேற முடியாது. சுயநலம் நாட்டிலே பரவப்பட்டால் நாடே அழிந்துவிடும். எனவே தான் இளைஞர்கள் வருங்கால சமுதாயத்தில் தகுமானமுள்ள இனமாக வாழ வழி வகுக்கவேண்டும்" என்று தென்மராடசி இளந்தமிழர் மன்ற ஆரம்பவிழா அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய சாவகச்சேரி முன்னாள் எம். பி திரு வ. நவரத்தினம் கூறினார். திரு. ஆ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கையின் எதிர்காலம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றது. தமிழினத்தைப் பொறுத்தவரை இந்த நிலையில் அரசியல் இளைஞர்களுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள தமிழ் இளைஞர்கள் தங்கு எதிர்காலத்தை தாமே நிர்ணயிக்கவேண்டிய நிலையில் இருக்கின்றனர்".

நாட்டிலும் நகரிலும்

நேற்று ஒரு பள்ளியில் நடந்த சம்பவம். இரண்டு மாணவிகள் தேர்தலைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்தார்கள். ஆரம்பத்தில் இருவரும் அன்யோன்யமாகவும் மரியாதையாகவும் சம்பாஷித்தார்கள். போகப்போக சம்பாஷணை இறுகி விவாதநிலைக்கு வந்தது. விவாதம் நடக்க நடக்க உணர்ச்சிகளும் மேலெழுந்தன. மெதுவாகப் பேசிக்கொண்டு வந்தவர்களின் குரல்கள் இப்பொழுது பள்ளி முழுவதும் கேட்கக்கூடிய அளவுக்கு உரத்துவிட்டன. இருவரும் வெவ்வேறு கட்சி சார்புடையவர்கள் என்பது மற்றப் பிரயாணிகளுக்கும் புலனாகிற்று. விவாதம் மேலும் மேலும் துரித கதியிலும் உச்ச ஸ்தாயியிலும் நடந்துகொண்டு போக சொல்லம்புகளும் வசவுக்கணைகளும் தாறுமாறாகப் பறந்தன. முதலில் 'நீங்கள், நாங்கள்' என்று சம்பாஷித்தவர்கள் இப்பொழுது 'நீ, நான்' என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

புன்சிரிப்புடன் சம்பாஷணை புரியத்தொடங்கியவர்களின் முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. சொற்போர் மற்போராகி விடுமோ என்று பிரயாணிகள் பயந்துகொண்டிருக்கும்சமயத்தில், நல்லவேளையாக அவர்கள் செய்த கலாட்டா பள்ளிறைவரின் காதுகளுக்கு எட்டியது. அவர்வண்டியை நிறுத்தி 'சத்தம்போடாமல் வரப்போகிறீர்களா? அல்லது எல்லாரையும் நேரே பொலிஸ்ஸ்டேசனுக்குகொண்டுபோகிறதா?' என்று உறுக்கினார். அவசரமாகப் போய்ச் சேரவேண்டிய மற்றப் பிரயாணிகளும் அவருடன் சேர்ந்து அந்த இரு தேர்தல் பிரசாரகர்களையும் கண்டித்து அடக்கிய பின் பஸ் அமைதியாகப் போய்ச்சேர்ந்தது.

தேர்தலைப்பற்றி 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டாலென்ன' என்று கண்மூடித்தனமாய் இராமன் நன்மை தீமை இரண்டையும் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லகாரியம்தான் - அவசியமானதும் கூட. ஆனால் பஸ், ரயில், சந்தை, கடைத்தெரு முதலிய பொது இடங்களில் உணர்ச்சிவசப்பட்டவர்கள் சண்டை போடுவது அழகாகாது. ஆபத்து நிறைந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள கருட்டுத் தொழிற்சாலைகள் பலவற்றில் 'தயவுசெய்து இங்கே தேர்தல் பேச்சுக்கள் பேசாதீர்கள்' என்று முதலாளிகள் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். வேலை ஸ்தலங்களில் தேர்தல் பேச்சுகளுக்கு இடம் கொடுத்தால் வேலை குறைந்து போவது ஒருபுறமிருக்க, வீண் சண்டைகளும் அடிதடிகளும் ஏற்படுவதற்கு ஏதுவாகும்.

கருட்டு முதலாளிகள் செய்வதுபோல மற்ற முதலாளிகளும் அந்த வழியைப் பின்பற்றலாம். இ. போ. ச. வும் செய்யலாம். அரசாங்கமே வேண்டுமானால் இதுபற்றி இன்று

(6-ம் பக்கம் பார்க்க)

தலைவர் திரு. கந்தையா பேசுகையில் 'கலை, கலாச்சார மேம்பாட்டிற்கு மாத்திரமன்றி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இனத்தின் முன்னேற்றத்திற்கும் இளைஞர் சமுதாயம் அயராது பாடுபடல் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

திரு. இரத்தினசபாபதி, மன்றச்செயலாளர் திரு. ந. கியாகராஜா உட்பட வேறுசிலரும் பேசினர். பின்வருவோர் கைதடிக் கிளைநிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ஆ. கந்தையா; உபதலைவர்: கு. துரையப்பா; இணைச்செயலாளர்கள்: சி. செந்திவேல், கோ. விஸ்வலிங்கம்; பொருளாளர்: திரு. இரத்தினசபாபதி; நிர்வாககுழுத் தலைவர்: திரு. சிற்சபாநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சிலின் பூதவுடல் சனிக்கிழமை

அடக்கம் செய்யப்படும் மறைந்த மாவீரனுக்கு உலகெங்கும் அஞ்சலி

ஐ.நா.கொடி அரைக்கம்பத்தில்பறக்கவிடப்பட்டது

லண்டன், ஜன. 25

காலம்சென்ற சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் மறைவு குறித்து, பலநாட்டுத் தலைவர்களும் அனுதாபம் தெரிவித்து செய்திகள் அனுப்பியுள்ளனர். உலகின் பல நாடுகளிலுமிருந்தும் அனுதாபச் செய்திகள் இங்குவந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றன. நேரில் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக பல தலைவர்கள் லண்டன் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் மறைவுக்கு தங்களது ஆழ்ந்த வருத்தத்தை இறுதியாகத் தெரிவிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான மக்கள், சர்ச்சிலின் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர். பிரிட்டன் முழுவதுமே சோகம் படர்ந்து காணப்படுகின்றது. சகல ஆடம்பர வைபவங்களும் களியாட்ட நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. தேவாலயங்களில் விசேஷ பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

சர். வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு சகல ராஜாங்க மரியாதைகளுடனும் இறுதிச்சடங்குகள் நடைபெறவிருக்கின்றன. அவரது பூதவுடல் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமைவரை லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் பொதுமக்கள் தரிசனத்துக்கு வைக்கப்பட்ட பின்னர், சனிக்கிழமை 30-ம் திகதி அவரது பெற்றோரின் கல்லறைக்கு அருகே சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்படும்.

ஐ. நா. வில் மரியாதை

வின்ஸ்டன் சர்ச்சிலின் மறைவு குறித்து, நேற்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நீலம், வெண்மை நிறம் கலந்த ஐ. நா. கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. ஐக்கிய நாடுகள் பொதுக காரியதரிசி யுதாண்ட் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் "சரித்திர புருஷர், தன்னிகரற்ற தலைவர், லட்சியவாதியொருவர் மறைந்துவிட்டார்" என்று தெரிவித்துள்ளார்.

பல நாட்டுத் தலைவர்கள் அனுதாபம்

ஜனாதிபதி காரணமாக வாஷிங்டன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் அமெரிக்க அதிபர் திரு லிண்டன் ஜோன்ஸன் வெளியிடுள்ள அனுதாபச் செய்தியில், "மாபெரும் வீரர் மறைந்துவிட்டார். உலகை இருள் கவ்விவந்த பொழுது ஒரு ஒளியாக வந்து உலக மக்களைப் பாதுகாத்த தலைவர் சர்ச்சில். அவரின் நாமம் உலக மக்களிடையே மறைந்துவிடாது" என்று தெரிவித்துள்ளார். சர்ச்சிலின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளத் தாம் மிக்க விருப்பம் கொண்டிருப்பதாகவும் ஆனால் டாக்டர்களின் அனுமதியுடன் கடைசி தினத்திலாவது தாம் கலந்து கொள்ள முடியும் என்றும் அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து பிரதமர் வெளியிட்ட அனுதாபச் செய்தியில், "விடுதலை மக்களின் ஒளியாக விளங்கிய சர்ச்சிலின் மறைவு, உலகிலுக்கு ஏற்பட்ட மற்றுமொரு பேரிடி" என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில், "மாபெரும் வீரர், சரித்திரத்தை மாற்றி அமைத்த பெரும் தலைவரின் மறைவு, குறிப்பாக உலக மக்களுக்கு ஏற்பட்ட பெரும் நஷ்டம்" என்று தெரிவித்துள்ளார்.

கானா பிரதமர் என்குறுமா வெளியிட்ட அனுதாபச் செய்தியில், "சரித்திரத்தைச் சிருஷ்டித்த சர்ச்சிலின் மறைவினால் உலகம் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறது. அவர் மனித வரலாற்றின் மாபெரும் தலைவர்" என்று தெரிவித்துள்ளார்.

கென்யா பிரதமர் ஜோமோ கென்யாட்டா வெளியிட்ட செய்தியில், "சர்ச்சில் மிகப் பெரியவர். அவரினால் பிரிட்டன் மட்டுமன்றி முழு உலகமே உயிர் தப்பியது. சுதந்திரத்தைப் பாதுகாத்த தலைவர் அவர்" என்று தெரிவித்துள்ளார்.

நைஜீரிய பிரதமர் அபூபக்கர் தபாபா பலேவா அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில், சர்ச்சில் மறைவு குறித்து தாமும் தமது நாடும் துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கிறது என்றும் சர்ச்சிலுக்கு நிகரானவர் உலகில் வேறு எவருமில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

எதியோப்பிய மன்னர் ஹெயிலி ஸலாஸி வெளியிட்ட அனுதாபச் செய்தியில், "உலகின் மதிப்பு மிக்க பெரும் தலைவர் ஒருவர் மறைந்து விட்டார். அவர் ஒரு உலகப் பிரமுகர். அவரின் மறைவினால் உலகெங்கும் துயர் படர்ந்திருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் வெளியிடுள்ள செய்தியொன்றில், சகாப்தமொன்றைச் சிருஷ்டித்த சர்ச்சில், அஞ்சா நெஞ்சம் படைத்தவர் என்றும் அவர் 20 ம் நூற்றாண்டின் மகாமேதை என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஐஸனோவர் வெளியிட்ட செய்தியொன்றில், "மாபெரும் தலைவர் சர்ச்சில் என்று குறிப்பிடுகிறார்.

ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் வெளியிட்ட அனுதாபச் செய்தியில், ஹிட்லருக்கு எதிராக யுத்தம் புரிந்து, உலகைக் காப்பாற்றிய சர்ச்சில் சோவியத் மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் அவரின் மறைவினால் துயருறும் பல கோடி மக்களுடன் சோவியத் மக்களும் இன்று கலந்து கொள்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்

இவர்களுடன் பரிகத்த பாப்பரசர் போல், முன்னாள் அமெரிக்க அதிபர் ட்ரூமன், பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகால், மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான், சிங்கப்பூர் பிரதமர், இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி, பிரெஞ்சு அதிபர் டிகோல், கனடா பிரதமர் திரு லெஸ்டர் பியர்ஸன், இத்தாலி அதிபர், ஜப்பான் பிரதமர் திரு. ஸாடோ, பெல்ஜியம் பிரதமர், மேற்கு ஜேர்மனி அதிபர், இந்திய ஒலிபரப்பு தகவல் மந்திரி திருமதி இந்திரா காந்தி, நேபாள வெளிவிவகார மந்திரி திரு துல்சிகிரி, மற்றும் ஏராளமான உலநாட்டு வெளிநாட்டுத் தலைவர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளனர். ஆயிரக்கணக்கான அனுதாபச் செய்திகள் வந்து குவிந்துகொண்டிருப்பதாக லண்டனிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

நேரில் கலந்து கொள்பவர்கள்

சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் இறுதிச் சடங்குகளில் நேரில் கலந்து கொள்ளும் பொருட்டு பல நாட்டுத் தலைவர்களும் இங்கு வந்தவண்ணம் இருக்கின்றனர். பிரெஞ்சு அதிபர் திரு. டிகோல், கனடா பிரதமர் திரு. லிஸ்டர் பியர்ஸன் ஆகியோரும் நேரில் கலந்து கொள்ளும் பொருட்டு லண்டனுக்கு நாளை வருவார்கள். அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் அநேகமாக வியாழக்கிழமை லண்டன் வரலாம் என்று முன்னமே செய்தியொன்று கூறுகிறது. இந்தியாவின் தூசார்பில் வெளிவிவகார மந்திரி சுவரண் சிங்குடன் குழுவில் கலந்து கொள்வார். ரஷ்யா, ஒருதூதுகோஷ்டியை அனுப்பி வைக்கும். இந்த கோஷ்டிக்கு ரஷ்ய வெளிநாட்டு மந்திரி தலைமை வகிக்கலாம் என்று வேறு ஒரு செய்தி கூறுகின்றது.

பல நாடுகளில் மரியாதை

காமன்வெல்த் நாடுகளிலும், மற்றும் பல நாடுகளிலும், மறைந்த சர்ச்சிலுக்கு மரியாதை தெரிவிக்கும்பொருட்டு அந்தந்த நாடுகளின் தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நேற்று முதல், தேசியக்கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.

வியண்டைனில் பெரும் வெடி விபத்து

பல விமானங்கள் எரிந்து நாசமாயின

வியண்டைன், ஜன. 25

லாவோஸ் தலைநகரமான வியண்டைனில் ஒரு இடத்திலுள்ள ராணுவ விமானத்தளமொன்றில் இயந்திரதுப்பாக்கி வெடித்து பெரும் விபத்து ஏற்பட்டதில் பல விமானங்கள் முற்றாக அழிந்தன. இவற்றுள் ஒன்பது ஜெட் போர் விமானங்களும் இருந்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடி விபத்தில் அநேகமாக லாவோஸ் விமானங்களில் அரைவாசி விமானங்கள் அழிந்துவிட்டதாக மற்றுமொரு செய்தி கூறுகின்றது

சக்தி வாய்ந்த இயந்திர துப்பாக்கி எதிர்பாராதவிதமாக வெடித்த காரணத்தினால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆட்சேதம் எதுவுமில்லை என்று கூறப்படுகிறது.

ஐ. நா. ஸ்தாபனம் மீது சூ-என்-லாய் குற்றச்சாட்டு

பல தவறுகள் நேர்ந்துள்ளதாம்

பீகிங், ஜன. 25

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பல தவறுகளைச் செய்துள்ளது" என்று சீனப் பிரதமர் திரு. சூ—என்—லாய் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவுக்கு சீனப் பிரதமர் நேற்று விருந்தொன்று அளித்தார். இந்த வைபவத்தில் பேசுகையில்தான் சூ—என்—லாய் மேற்கண்டவாறு கூறினார். டக்டர் சுபந்திரியோ இங்கு 4 தினங்கள் தங்குவார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்காத பல நாடுகள் ஒன்றுமையாக, தகராறு எதுவுமின்றி இருக்கின்றன என்று தெரிவித்த சீனப் பிரதமர், ஐ. நா. விலிருந்து இந்தோனேஷியா விலகிக்கொண்டதைப் பாராட்டிப் பேசினார்.

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமை பல பிழைகளைச் செய்துள்ளபோதிலும் இந்த ஸ்தாபனம் நடுநிலைமை வகித்து தகராறுகளைத் தீர்ப்பதில்லை" என்றும் சீனப்பிரதமர் சூ—என்—லாய் தெரிவித்தார்.

அமெரிக்க

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வலுவடைகிறது

சைகோனில் 100 பேர் கைது

சைகோன், ஜன 25

தென்வியட்னாமில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், இப்பொழுது மற்றைய பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

நேற்று பல இடங்களில் பௌத்த மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் பௌத்த மதத்துக்கு தென்வியட்னாம் அரசாங்கம் கேடு விளைவிப்பதாக இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

சைகோனில் நேற்று பௌத்தர்கள், ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்த பொழுது பொலிஸார் தடைபோட்டனர். தடையை மீற முயற்சித்த 100 பேர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சீனாவுக்கு எச்சரிக்கை

லண்டன், ஜன. 25

ஆபிரிக்க நாடுகளில் கம்யூனிஸ்ட் சீனா குறுக்கிடுவது நிறுத்தப்படவேண்டும் எனறும் இந்த நாடுகளில் சீனா தலையிடு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஹாரிஜோன்ஸ்ட் அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நவீன அச்சு இயந்திரம்

லண்டன், ஜன. 25

உலக அச்சு இயந்திரசாலைகளில் நவீனமானதொன்று, இவ்வருட முற்பகுதியில் பிரிட்டனில் திறக்கப்படவிருக்கிறது. இப்புதிய இயந்திரசாலை வருடமொன்றில் 5,00,00,000 புத்தகங்களை முக்கியமாக அட்டைகளை அச்சடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள்

லண்டன், ஜன. 25

பிரிட்டனில் சாதனையை நிலைநாட்டக்கூடிய 86 புதிய விருத்தித் திட்டங்களை கடந்த வருடம் ஜூலை மாதம் 30-ம் திகதிவரை தேசிய ஆராய்ச்சி விருத்தி ஸ்தாபனம் ஆரம்பித்து வைத்துள்ளது.

நியூயோர்க், ஜன. 26

ஐ. நா. நிதி நெருக்கடியை உலகஸ்தாபனத்துக்கு தீங்கு ஏற்படாதவகையில் நிவர்த்திக்க முடியுமென இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித மாதம்

—செல்வி பா. அபூஸாலிஹ்—

இஸ்லாமிய நாடுகளிலே மக்கள் வாழும் ஒவ்வொரு முனைமுடுக்குகளிலும் இப்புனித நம்மானை கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருப்பார்கள். இஸ்லாமிய மாதங்களில் மிகவும் போற்றற்குரியது நம்மான் மாதமே.

நம்மான் மாதம் மிகவும் சிறந்தது என்பதை நாம் போற்றுவதற்குக் காரணம், இம்மாதத்திலே "லைத்துல்கத்ர்" என்னும் இரவில் அருமறையாம் திருமறையை இறைவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கு அருளிச் செய்தான் என்பதாலேயே மேலும் இறைவனும் தன் திருமறையில் "நம்மான் மாதத்தில்தான் குர்ஆன் முதல் முதல் அருளப்பெற்றது என வளம்புகிறான்." பொலிவிழந்த பூமியிலே மறைந்திருக்கும் மாணிக்கம் போல் மண்புயர் நம்மான் மாதத்திலே மறையிழந்த இந்நிறையருள் இரவு இம்மறை காயாக இலங்கிக்கொண்டிருக்கிறது. எனவே நம்மான் மாதத்திலே ஒவ்வொரு இரவும் விசேஷ தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு இரவுகளிலும் விழித்திருந்து இறைவனை இறைஞ்சித் தொழுது அவனருளை நிறையப்பெற முயல வேண்டும்.

சூரியன் உதிக்கு முன் "சுஹர்" நேரத்தில் உணவருந்தி அஸ்தமன நேரம்வரை உண்பது, பருகுவது மற்றும் பல காரியங்களிலிருந்தும் நம்மைத் தவிர்த்து வணக்கத்திலும் திருமறை ஓதுவதிலும் ஈடுபடவேண்டும். சூரியன் அஸ்தமித்தவுடன் குறிப்பிட்ட நேரத்தில் நோன்பு திறக்க வேண்டும். உண்டு களித்த பின்னர் "தராவீஹ்" என்னும் தொழுகைக்குச் செல்ல வேண்டும்.

இப்புனித நம்மான் மாதம் தன்னடக்கத்தையும் சுய விசாரணையையும் எமக்களிக்கிறது. சமுதாயத்தில் நம்மிலும் கீழான துரதிஷ்டசாலியான ஒருவனின் நிலையை உணர்ச்சிகளை அறிந்து அவர்களின் கஷ்டங்களிலும் துயரங்களிலும் நம்மை அனுதாபம் கொள்ளுமாறு செய்ய அது பெரிதும் உதவியாயிருக்கிறது. இமைக்கும் மறுமைக்கும் நோன்பானது எண்ணிறந்த நன்மைகளை எமக்களிக்கிறது. அன்பு- கருணை- பச்சாத்தாபம் என்பன எம்மிடையே மிளிர வகையேற்படுகிறது.

தியாகத்தை அடுத்து வரும் மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சி. தியாகமும் தன்னடக்கமும் இடம்பெறாத ஒரு வாழ்வு வாழ்வல்ல. தனது நெஞ்சத்தில் இறைவனுக்கு இடங்கொடுக்காதவன் வழிகெட்டென்ன. பூரண சுகத்தோடு இருக்கும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நோன்புநோற்றேயாக வேண்டும்.

விஞ்ஞானம் என்றால் என்ன?

—ரோபர்ட் லீவன்ஸ்—

நிற்கால விஞ்ஞானம் முற்காலத்திலேயே தோன்றியதா என்பதைக் காட்ட ஆலங்கட்டி மழைபற்றிய இரண்டு பழங் கொள்கைகள் உதவிபுரிகின்றன. விஞ்ஞானம் என்பது நவீன உலகத்தின் படைப்பேயாகும் என்றுதான் பலபேர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது தவறு என்றுசொல்கிறார்கள் அமெரிக்கப்பேராசிரியர்கள் இருவர்.

பண்டைய விஞ்ஞானத்துக்கும் இன்றைய விஞ்ஞானத்துக்கும் முக்கியமான வேற்றுமைகள் இல்லை என்பது டானியல் இ. கெல்ஸன்ஸன், டானியல் ஏ. கிரீன்பர்க் என்னும் அமெரிக்கப் பேராசிரியர்கள் கருத்தாகும்.

நியூயோர்க்கில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவ்விருவரும் "கொலம்பியா யூனிவர்ஸிடி ஃபோரம்" என்ற பத்திரிகையில் தங்கள் கருத்தை நன்கு விளக்கியுள்ளனர். விஞ்ஞானம் தோன்றியது நவீன காலத்தில்தான் என்பதில் மருந்துக்குகூட உண்மை இல்லை என்று இப்பேராசிரியர்கள் இருவரும் அப்பத்திரிகையில் எழுதியுள்ளனர்.

2400 ஆண்டுகளுக்கு முன்பு

கிறிஸ்து பிறப்பதற்கு முந்திய நான்காவது, ஐந்தாவது நூற்றாண்டுகளில் கிரேக்க நாட்டில் ஆலங்கட்டிமழைபற்றி இரண்டு கொள்கைகள் உருவாகியிருந்தன. விஞ்ஞான முறை எவ்வளவு பழமையானது என்பதைக் காட்ட இவ்விரு கொள்கைகளையும் பேராசிரியர்கள் விளக்கிக் கூறுகிறார்கள்.

அவ்விரு கொள்கைகளில் ஒன்றை உருவாக்கியவர், அனக்ஸகோரஸ். இவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஏதென்ஸ் நகரில் வாழ்ந்த அறிஞர். இவருக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்பு இதே நகரில் வாழ்ந்த அரிஸ்டாட்டில் என்ற இன்னொரு தத்துவ அறிஞர் இவர் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்ட இன்னொரு கொள்கையை உருவாக்கி, ஆலங்கட்டி மழைக்கு விளக்கம் கூற முற்பட்டார். இவ்விரு தத்துவ அறிஞர்களின் கொள்கைகளும் வானிலை பற்றிய ஒரு நூலில் காணக் கிடக்கின்றன. இந்நூலின் ஆசிரியர், அரிஸ்டாட்டிலாக இருக்கலாம். வானிலை பற்றி உலகத்தில் உள்ள நூல்களில் மிகப் பழமையானது இதுவேயாகும்.

கோடை காலத்தில் பூமியின் மேற்பரப்பை ஒட்டியுள்ள பகுதி சூடாகும்போது, இக்கடும் வெப்பம் மேலே பரவுகிறது என்றும், அப்படிப் பரவும்போது அது மேகங்களையும் உயர உயர எடுத்துச் செல்லும் என்றும், இவ்வாறு உயரச் செல்லும் மேகம் வாயுமண்டலத்தில் குளிர்ச்சியான பகுதியை அடைந்ததும், மேகத்தின் நீராவி குளிர்ந்து பனிக்கட்டியாக உருண்டு ஆலங்கட்டியாக விழுகிறது என்றும் விளக்கினார் அனக்ஸகோரஸ்.

மாறுபட்ட கொள்கை

ஒரு நூற்றாண்டுக்குப் பின்பு வந்த அரிஸ்டாட்டில் இதுபற்றிச் சில சோதனைகள் செய்து பார்த்து ஊன்றிச் சிந்தித்தார். கோடைகால ஆலங்கட்டி மழை வாயுமண்டலத்தில் பொதுவாகத் தாழ்வான உயரத்திலேயே தோன்றுவதாகும். அனக்ஸகோரஸ் கொள்கைப்படி அது உயரமான மலை உச்சிகளில் தோன்றுவது அரிது; எனவே அக்கொள்கை பொருந்தாது என்று மறுத்தார் அரிஸ்டாட்டில். ஆலங்கட்டிகள் பெரியனவாகவும் வழவழப்பாக இல்லாமலுமே இருப்பது வழக்கம், இதையும் அரிஸ்டாட்டில் சுட்டிக்காட்டி அனக்ஸகோரஸ கொள்கைப்படி மிக்க உயரத்திலிருந்து அவை விழுவதாயிருந்தால் சிறியனவாகவும் வழவழப்பாகவும் இருக்கவேண்டுமே என்றார்.

(தொடரும்)

மலேயா முத்திரை

கோலாலம்பூர், ஜன. 25

காலம்சென்ற டாக்டர் எம். ஈ. ஹூட்டின் முத்திரைச் சேகரிப்பில் இருந்த மலேயா முத்திரை கடந்தமாதம் லண்டனில் 280 பவுனுக்கு ஏலத்தில் விற்பனையானது.

மாணவர் மலர்

"V" என்றால் சர்ச்சில்

— மகான் —

V என்றால் என்ன? சரித்திரத்தை மற்றி அமைத்த சர். வின்ஸ்டன் சர்ச்சிலைப் பொறுத்தமட்டில் ஆங்கிலத்தில் "வி" என்ற எழுத்து வெற்றியைத் (Victory) தான் குறிக்கும். நீளமான சுருட்டு வாயில்புதைந்துகொண்டிருக்க, சுட்டுவிரலினாலும் நடு விரலினாலும் அவர் V என்று காட்டும் சந்தர்ப்பங்கள் கடந்த யுத்தகால சரித்திரத்திலும் அவரின் வாழ்க்கையிலும் பல தடவைகள் நிகழ்ந்திருக்கின்றன. தோல்வியைக்கண்டு பயப்படாத அவரின் வாழ்க்கையில், தோல்வி ஏற்படவில்லை. வெற்றி, வெற்றி என்பதுதான் சர்ச்சிலின் பேச்சு; மூச்சு!

1874-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் திகதி ஏழாவது கோமானின் மூன்றாவது புதல்வரான ரன்டோல் சர்ச்சில் பிரபுவுக்கு மூத்த புதல்வனாக சர்ச்சில் பிறந்தார். இவரது தாயார் பெயர் ஜென்னி ஜெரோமியாகும். இவர் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். இளமையிலேயே இவர் துடுக்குத் தனமும் திறமை ஆர்வமும் கொண்டிருந்தார்.

24-வது வயதில் இராணுவத்தில் சேர்ந்து வெற்றிவாகை சூடிய சர்ச்சில் 26-வது வயதிலேயே, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அங்கத்தவரானார். பிரிட்டனின் போர் ஆத்தான காலங்களில் சர்ச்சில் முன்னின்றார். விடுதலையை விரும்பிய பிரிட்டிஷ் மக்களின் இதயத்தில் அப்போது முதல் சர்ச்சிலின் நாடந்தான் குடிகொண்டிருந்தது.

வாழ்க்கையில் மற்றத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்காத பல துணிகர சம வங்கள் சர்ச்சிலின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கின்றன. அவருடைய ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு கதைசொல்லும். யுத்தகாலத்தில் அவர் வகுத்த தந்திரங்கள் கணக்கற்றவை. நினைத்தும் பார்க்கமுடியாதவை. கடந்தகால யுத்தங்களில், ஹிட்லரையே விரட்டியடித்த பெருமை சர்ச்சிலுக்குண்டென்றால் அவரின் வீரம் தான் என்ன!

ஒய்வுபெறும் வயதில் இரண்டாம் உலக யுத்தத்துக்கு பிரிட்டிஷ் மக்களுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பை சர்ச்சில் ஏற்றிருந்தார். அவரிடம் திறமை இருந்தது. அனுபவம் இருந்தது. அதிகாரம் ஏற்பட்டிருந்தது. [illegible] எவரும் அன்றோ இன்றோ தனித்து நிற்கமுடியாது! வயது போய்க்கொண்டிருந்தாலும் அவர் வாழ்க்கையை பெரிதும் விரும்பினார்.

சர்வதேசவிவகாரங்களில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பார். முன்கோபமும் பெருமளவில் வந்துகொண்டிருக்கும். ஆனால் அடுத்த நிமிடம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் "எதிரிகளை" குறும்புத்தனமாக பேசி, குழந்தைகளைப் போல் தமது நாக்கை வெளியில் நீட்டி கிண்டல் செய்வார்.

நீளமான சுருட்டு புகைப்பதில் தனி இன்பங் கொண்டவர். விசித்திரமான தொப்பிகளை விருப்பத்துடன் அணிபவர். அவரின் வாழ்க்கையில் மாடிப் படிகளில் தவறி விழுந்த நாட்கள் கணக்கில் அடங்காது. முகம் குப்புற, தலைகீழாக, சரிவாக, அப்படி.....இப்படி என்று பல மாதிரி அவர் விழுந்திருக்கின்றார்.

சர்ச்சில் தன்னிகரற்றவர். அவரின் திறமைகளை எழுத்தில் கூறமுடியாது. அவர் சரித்திர புருஷர், மகாமேதை. யுததகால அவதாரம். ஒரு சகாப்தத்தையே சிருஷ்டித்த பெரும் வீரர்... தீரர்.....

சந்திரனில்...

— இ. கிறிஸ்ரி —

விஞ்ஞானம் ஆதிகாலம் தொட்டே வளர்ந்துவந்தது. தாங்கள் வாழும் உலகத்தைத் தவிர வேறு எந்தப்புது உலகத்தையும் ஆராய்ச்சி செய்ய முயற்சிகளில்லை. ஆதிகால விஞ்ஞானிகள், அவர்களைத் தொடர்ந்து வந்த விஞ்ஞானிகளும் புது உலகத்தை ஆராய முயற்சிசெய்யவில்லை. ஆனால்சில ஆண்டுகளுக்கு முன்பு புது உலகத்தை ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர். அந்த முயற்சி இன்னும் சில ஆண்டுகளுக்கு பின்பு வெற்றியடையும் என்று நம்பப்படுகிறது.

1940-ம் ஆண்டில் சந்திரமண்டலத்தை விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கினார்கள். சந்திரமண்டலத்துக்குப் போவதுமிகவும் கடினமானது என்பதையும் அறிந்திருந்தனர். பற்பல பொருள்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளால சந்திரமண்டலத்துக்கு போவதற்கு ஏதாவது வழிசெய்யமாட்டார்கள். அவர்கள் திறமையால் "ராக்கெட்"டைக் கண்டுபிடித்தார்கள். ராக்கெட் 1959-ம் ஆண்டில் சந்திரமண்டலத்தை நோக்கிப் பறந்தது.

இப்பொழுது விஞ்ஞான உலகம் போறபோக்கைப் பார்த்தால் 1980-ம் ஆண்டில் சந்திரமண்டலத்தில் குடியேறிவிடலாம் என்று நிச்சயமாகக் கூறலாம்.

இது உண்மை

— த. மகேந்திரன் —

இங்கிலாந்தில் ஒரு பேப்பர் தொழிற்சாலையில், ஓர் அம்மணி, மரக்கூழ் தயாரிக்கப்படுகிறதான இடத்தில் தனது நீல நிறப் பையைப் தவறுதலாக போட்டு விட்டார். இதன் காரணமாக நீல நிறப் பேப்பர் உற்பத்தியாகியது. இதுவே வர்ணக் கடதாசி உண்டாகக் காரணமாயமைந்தது. இது 1790-ல் நடந்தது.

ஆரம்ப காலத்தில், மணிகூக்கு தூவியே மையை ஒற்றினர். ஆனால் பிற்காலத்தில் பேப்பர் செய்யும் ஒரு தொழிற்சாலையில், பேப்பர் செய்ய உபயோகிக்கும் ஒரு திரவத்தை பேப்பர் செய்யும் போது தவறுதலாக உபயோகிக்காது விட்டனர் இதனாலேயே ஒற்றுத்தாள் ஏற்பட்டது.

குட்டி போடும் மரம்

— து. துரைசிங்கம் —

மரங்கள் தங்கள் சுற்றுப்புறத்துக்கேற்றவாறு வாழ்க்கையை மாற்றியமைக்கின்றன. இவற்றில் கண்டல் இனத்தைச் சேர்ந்த மரங்கள் தங்கள் இனத்தைப் பெருக்குவதற்குப் புதுமுறையாகக் கையாளுகின்றன. இவற்றையே குட்டி போடும் மரங்களென அழைக்கப்படும்.

கண்டல் மரம் உவர் நீரும் சேறுமாய் உள்ள சதுப்பு நிலங்களில் பெருமளவில் காணப்படுகின்றது. சதுப்பு நிலத்தில் வாழும் தாவரங்கள் தம் இனத்தைப் பெருக்குவது மிகவும் கடினம். விதை முளைப்பதற்கு நீர், காற்று, வெப்பம் ஆகிய மூன்றும் தேவை. ஆனால் இந்நிலங்களில் காற்றுக் கிடையாது. உவர்ச்சேற்றில் விழும் விதைகள் சேற்றினால் அமிழ்ந்து அழுகிவிடும்.

இப்படியான இடத்தில் தனது இனத்தைப் பெருக்குவதற்குக் கண்டல் மரம் ஒரு முறையை கையாள்கின்றது. இம்மரம் மற்றை மரங்களைப் போலவே பூத்து காய்க்கின்றது. காய் முற்றிய பின்னரும் மரத்திலிருந்து வீழ்வதில்லை. தாய்மரத்தில் இருந்தபடியே விதைகள் முளைக்கத் தொடங்கிவிடும். விதையில் சேமிக்கப்பட்டிருக்கும் உணவின் மூலம் முளை விதையிலிருந்து கீழ் நோக்கி வளரும். எட்டு அல்லது ஒன்பது மாதத்தில் விதையிலுள்ள உணவு முடிந்துவிடும். முளைத்த முளை ஏறத்தாள பதினெட்டு அங்குல நீளமுள்ளதாகவிருக்கும். இப்பொழுதுதான் காய் தாய்மரத்திலிருந்து பிரிந்து கீழே விழும். கீழே விழுந்தவுடன் திரட்சியும்கூர்மையுமான முளை சேற்றில் ஊன்றி வேர்களைப் பரப்பி வாழத் தொடங்குகின்றது.

கலண்டரின் கதை

- நல்லை அமிழ்தன் -

கலண்டரைக் கண்டுபிடித்தவர்கள் பாபிலோனியர்கள். அவர்கள் வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகவும் ஒவ்வொரு மாதத்தையும் 29 அல்லது 30 நாட்களாகவும் பிரித்தனர். அதனால் அவர்களின் வருடம் 354 நாட்கள் உடையதாக இருந்தது. எகிப்தியர்கள் இதைச் சீர்திருத்தி ஒவ்வொரு மாதத்தையும் 30 நாட்கள் உடையதாக ஆக்கினர். ஜூலியஸ்ஸீஸர் வருடத்துக்கு 365 நாட்கள் என்று ஏற்படுத்தினார். ஒவ்வொரு லீப் வருடமும் பெப்ரவரியில் ஒரு நாள் கூடச் சேர்க்கப்பட்டது. கி. பி. 1582-ல் ஸ்பானிய அறிஞர் கிரிகோரி கலண்டரையும் சிறிது புதுப்பித்து சீர்திருத்தம் செய்தார். அந்த முறையைத்தான் நாம் இப்போது பின்பற்றி வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நடைபெறவிருக்கும் மலேரியா தடுப்பு மகாநாடு

கொழும்பு, திங்கள்

மலேரியா தடுப்பு சம்பந்தமான சர்வதேச ஆறாவது மகாநாடு அடுத்தவருடம் ஏப்ரல் மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கிறது. 88 ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும்.

மலேரியா தடுப்பு ஆறாவது மகாநாட்டை இலங்கையில் நடத்துவதென்ற தீர்மானம் குறித்து தான் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும் 88 நாடுகளில் 150 சுகாதாரப்பிரதிநிதிகளை வரவேற்பதில் இலங்கை அரசாங்கம் வெகு விருப்பம் கொண்டுள்ளதாகவும், இந்த மகாநாட்டை நடத்தும் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் பிரதமர் சென்ற வாரம் தெரிவித்திருந்தார்.

1963-ம் ஆண்டு நடைபெற்ற மலேரியா ஆரம்ப மகாநாட்டில் 1966-ல் நடத்தும் மகாநாட்டை இலங்கையில் நடத்த இலங்கை அரசாங்கத்தின் அனுமதி பெறுவதென்று தீர்மானிக்கப்பட்டது. மலேரியா தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கை பொது சுகாதாரப்பகுதியின் பெரு வெற்றியைக் கண்டே இந்த மகாநாட்டை இலங்கையில் நடத்த உலக சுகாதார ஸ்தாபனம் விரும்பியது.

1966-ல் நடைபெறவிருக்கும் மகாநாட்டுக்கான ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரிய தரிசி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது.

கண்காட்சியில் முன்னணி

பொன். ஜன. 25

உலகில் நடைபெறும் சர்வதேச கண்காட்சிகளில் பெரும் அளவில் கலந்துகொள்ளும் நாடுகளில் மேற்கு ஜெர்மனி முதலிடம் வகிக்கிறது. 1965-ம் ஆண்டில் பல்வேறு நாடுகளில் நடைபெறவிருக்கும் 59 கண்காட்சிகளில் மேற்கு ஜெர்மனி கலந்துகொள்ள விருக்கின்றது. இது தவிர ஐரோப்பிய நாடுகளில் நடைபெறவிருக்கும் 39 கண்காட்சிகளிலும் மேற்கு ஜெர்மனி பங்கு கொள்ளும் மேற்கு ஜெர்மனியிலுள்ள பிரபலமான 250 நிறுவனங்கள் இந்தக் கண்காட்சிகளில் அரங்குகளை அமைக்கவிருக்கின்றன. ஆசியாவில் 4 கண்காட்சிகளிலும், ஆபிரிக்காவில் 7 கண்காட்சிகளிலும் அமெரிக்கக் கண்டத்தில் 8 கண்காட்சிகளிலும், ஆஸ்திரேலியாவில் ஒரு கண்காட்சியிலும் ஜெர்மனி கலந்துகொள்ளும்.

புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

சங்கானைகிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத் தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமைவகித்தார். புதிய நிர்வாகிகள் தெரிவு வருமாறு: தலைவர்- க. அம்பலவாணர், உப தலைவர்- த. தம்பித்துரை, காரியதரிசி- ச. கந்தசாமி, உபகாரியதரிசி- க. துரைராசா நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ராஜா சினிமா (சுழிபுரம்)
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
நடித்த
திருடாதே

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485
6 30-க்கு மட்டும்
கடவுளைக்கண்டேன்
9-30-க்கு மட்டும்
சுஹாக் சிந்தூர்
(ஹிந்தி)

REGAL — JAFFNA
NOW SHOWING
Robert Wabber-Annasten
in
The Nun and the Sergeant
(War Film)

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி பிளாசா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
விஜயா மொடேர்ன்
(மட்டக்களப்பு) (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30

சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(ஈஸ்மென்கலர்)

கூயேசசை முன்னணி உருவாகிறது

கொழும்பு, திங்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் கூயேச்சை அபேட்சகர்கள் முன்னணி ஒன்று உருவாகிவருகிறது. சௌட்டர்களான வேர்னன் திசநாயக்காவும், வீரா விமலரத்னவும் இந்த முன்னணியை அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இலங்கை அரசியல் வட்டாரத்தில் ஜ. நா. வின் மனித உரிமைச் சட்டம் சேர்க்கப்படவேண்டும் என்பதே இந்த முன்னணியின் அடிப்படைக் கொள்கையாகும் என இவர்கள் தெரிவித்தார்கள். இலங்கை சட்டத்தில் மனித உரிமைகளையும் தேர்த்துகொள்வதால் நாட்டில் நிலவும் சாதி, மொழி, மத வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்கள்.

கூயேச்சை அபேட்சகர்களுக்கு முன்னணியில் சேர்ந்துகொள்ள அழைக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

'ஏன் வாஞ்லியை பயன்படுத்துகிறோம்'

மாவனல்ல, செவ்

"சிங்கள தமிழ் ஆசிரியர்கள் அனைவரதும் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஒரே கல்வி மந்திரி நானே. எதிர்வரும் மார்ச் மாதம் 23-ந் திகதி அமைக்கப்படவிருக்கும் புதிய மந்திரிசபையிலும் நானே கல்வி மந்திரியாக இருந்து எமது தேசிய கல்வித் திட்டத்தை அமுல் நடத்துவேன்" என்று கல்வி மந்திரி திரு பி. பி. ஜி. கலுபண்ட மாவனல்ல என்ற இடத்திலுள்ள பாடசாலை ஒன்றின் புதிய கட்டடத் திறப்பு விழாவை திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

பத்திரிகைகள் தமது அரசாங்கம் செய்த முன்னேற்றவேலைகளைப்பற்றி மூடி மறைப்பதாலேயே அரசாங்கம் வாஞ்லியை பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

'ஐந்து ரூபா ஒரு ரூபாவுக்கும் சமனல்ல'

பொல்காவலை, திங்கள்

"தங்கள் வாக்குகளை அளிக்கும்போது அனைவரும் புத்திசாலித்தனத்துடன் நடந்துகொள்ளவேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தல் இலங்கையின் மிகவும் முக்கியம் வாய்ந்த தேர்தலாகும்" என்று ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் திரு. டட்லிசேனாநாயக்கா அலங்கவா என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கூட்டரசாங்கம் பதவிக்கு வருமானால் மக்கள் நாட்டை பாழ்படுத்த அனுமதித்துள்ளார்கள் என்ற அர்த்தமாகும் என்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் பதவிக் காலத்தில் ஒரு ரூபாவுக்கு வாங்கிய பொருளை இப்பொழுது ஐந்து ரூபாவுக்கும் வாங்க முடியாமல இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சையில் சித்தி

பருத்தித்துறை, திங்கள்

வட-இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கடந்த நவம்பர் மாதத்தில் நடாத்திய ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் சுமார் 70 சதவீத மாணவர் சித்தியடைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

375 பாடசாலைகளில் இருந்து 6536 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினராம்.

வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடாத்திய மூன்றும் வகுப்புப்பரீட்சையில் தோற்றிய 900 மாணவர்களில் 75 வீத மாணவர் சித்தியடைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

சங்கானை பட்டினசபையின் புதிய தலைவர்

திரு. அம்பலவாணர் போட்டியின்றித் தெரிவு

சுழிபுரம், திங்கள்

சங்கானை பட்டினசபையின் புதிய தலைவராக திரு க அம்பலவாணர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமையில் தலைவர் தெரிவு இன்று காலை நடைபெற்றது. புதிய தேர்தல் கடந்த டிசம்பர் மாதம் 19-ந் திகதி நடைபெற்றது. அதற்கு முன்னர் ஒரு வருட காலமாக பட்டினசபை பொறுப்பை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏற்றிருந்தார்.

புதிய தலைவராக திரு க. அம்பலவாணரைத் தேர்ந்தெடுப்பதாக முதலாம் வட்டார அங்கத்தவர் திரு சி. க. திருச்சிற்றம்பலம் பிரேரிக்க 3-ம் வட்டார அங்கத்தவரான திரு. சி. கந்தசாமி அனுமதித்தார். உப தலைவராக திரு. இ சி கந்தசாமியை திரு சி. க. திருச்சிற்றம்பலம் பிரேரிக்க 4-ம் வட்டார அங்கத்தவரான திரு. த. இராசையா அனுமதித்தார்.

100 முடை மாவு அன்பளிப்பு

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிப்பகுதிக்கு 'கெயர்' ஸ்தாபன அன்பளிப்பாக 100 முடை மாவு கிடைத்திருப்பதாவும் இதைவிட பால் மா உணவு, அரிசி முதலான பல்வேறு உதவிகளையும் விநியோகம் செய்யும் சேவையை காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் அவர்கள் ஆரம்பித்துள்ளார்.

நாகர்கோவில் மணற்காடு குடத்தனை, கரையூர் முதலான இடங்களுக்கு இவ்வுதவி வழங்கப்படவிருப்பதாவும் இம்பிலிட்டி, பருத்தித்துறை முதலான இடங்கள் உட்பட சுமார் 340 குடும்பங்களுக்கு இவை குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப பகிர்ந்து செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வளிக்க முயற்சி

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி சிறுகைத்தொழில் சேர்ந்த கிராமங்களில் குடிவலியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்குமாக சிறுகைத்தொழில் நிலையங்களை ஏற்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனைகள் நடைபெறுகிறது.

பெரும்பாலும் தும்புத் தொழிலுக்கு வாய்ப்பு இருப்பதாவும் தற்போது ஒரு வாவது பணம் கிடைக்க வெண்காயக்கூட்டு நிலையங்களை ஏற்படுத்தக் காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் முயன்றுவருவதாகத் தெரியவருகிறது.

காந்திஜி நினைவுதினம்

சாவகச்சேரி, திங்கள்

தென்மராட்சி இளந் தமிழர் மன்ற கைதடிக் கிளையின் செயற்குழுக் கூட்டம் மன்ற அலுவலகத்தில் திரு. ஆ. க்கதையாவின் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் இம்மாதம் 30-ம் திகதி காந்திஜி நினைவுதின விழாக் கூட்டம் நடாத்துவதென்றும் திரு. வ. க நவரத்தினத்தையும், பண்டிதர் க. பொ இரத்தினத்தையும் பிரதம பேச்சாளர்களாக அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

தேவை

வலிகாமம் மேற்கு ப. நோ. கூ. ச சமாசத்திற்கு ஓர் விநிதர் தேவை.

தகுதி:

பொதுத்தராதரப் பரீட்சையில் சிரேஷ்ட தராதரத்திற்குரிய பூரண சித்தி பெற்றிருத்தல்வேண்டும். தமிழ் மூலமாயின் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:

20 இன் மேல் 30 திற்குள்.

கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சி, தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டெழுத்து அனுபவம், கணக்குப் பதிவியல் அனுபவம் உடையோர் விரும்பத்தக்கது.

வேதனம்:

75 — 125.
5 — 10.

(பிற சலுகைகள் சமாசநடைமுறையில் உள்ளபடி)

விண்ணப்பம் 6-2-65க்கு முன்பு சமாசத் தலைவருக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

1200

வரி விளம்பரம்

தேவை

ஆங்கில ஆசிரியர் தேவை. சேனதிருக்காவல, 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், என்ற விலாசத்துக்கு கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.

1499

வகுப்பு

பெண்களுக்கு மட்டும். பாலர் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். வி. வரையிலும் உள்ள வகுப்புகளுக்கு சிறந்த முறையில் பட்டதாரிகளால் பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். விருப்புவோர் 30-1-65-க்கிடையில் 106, பெரிய வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

1493

தொய்வு, நரிமிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பிரமுகர்கள் அடங்கிய கற்றறிந்தோர் இரும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நரிமிவுக்கு 10 நாள் மருந்து 10-50, வைத்தியர் பரிபூரணாந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

WANTED

Vacancies occur for the undermentioned Posts in a recognised agecy firm in Jaffna. Applicants Should be in a position to deposit cash security Cashier Sales Representatives and Lady Typist with Rs 1000 00 and Rs. 500 00 respetcively. Apply C/o Eelanadu. 1478

தபால் பகுதியினர் தயார்

கொழும்பு, செவ்வாய்

தேர்தல் தபால்களை விநியோகம் செய்ய தபால் பகுதி ஆயத்தமாகவுள்ளது. அபேட்சகர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள், வாக்காளரின் உத்தியோகபூர்வமான வாக்கு அட்டைகள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு தபால் பகுதி சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியரசு தினத்தில் தி. மு. க. நடவடிக்கை

சகல நிகழ்ச்சிகளுக்கும் அரசாங்கம் தடை உத்தரவு

சென்னை, ஜன. 26

இன்று இந்தியாவின் குடியரசு தினமாகும். குடியரசு தின விசேஷ அணிவகுப்பு நிகழ்ச்சிகள் இன்று காலையிலிருந்து புதுடில்லியில் ஆரம்பமாகும். இது தவிர நாட்டின் பல பகுதிகளிலும் குடியரசு தின நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தி. மு. க. துக்கதினம்

குடியரசு தினமான இன்று இந்தியாவின் ஆட்சிமொழியாக ஹிந்தி அமுலாக்கப்படவிருக்கிறது. இதனைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்று பெருமளவில் 'துக்கம்' அனுஷ்டிக்கவிருக்கின்றார்கள்.

சென்னையிலும் சற்றுப்புறங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், எந்தவித பொதுக் கூட்டமும் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. குடியரசு தினத்தில் அசம்பாவிதங்கள் நிகழாவண்ணம் தடுக்கவே தி. மு. கழகத்தினருக்கு இந்தத் தடைகள் விதிக்கப்பட்டிருப்பதாக தமிழ்நாடு முதன் மந்திரி திரு பக்தவத்ஸலம் அறிவித்துள்ளார். பொதுக் கூட்டங்களுடன், ஊர்வலம் நடத்துவதற்கும், ஒலிபெருக்கிகள் உபயோகிப்பதற்கும் தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன

சட்டம் மீறப்படும்?

குடியரசு தினத்தை பகிஷ்கரிக்கும் நோக்கம் தங்களுக்குக் கிடையாது என்றும் ஆனால் இந்தப் புனிதமான தினத்தில் ஹிந்திமொழி ஆட்சிமொழியாக அமுல் செய்யப்படுவதை தங்களால் பொறுக்கமுடியாதென்றும் தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். குடியரசு தினத்ன்று ஹிந்தி ஆட்சி மொழியாக அமுலசெய்யபபடுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேற்கொள்ளும் எதிர்புநடவடிக்கைகள் ஒருவேளை சட்டத்தையும் மீறப்படலாம் என்று தி. மு. க. தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தி. மு. கழகத்தினர் சட்டத்தை மீறும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொண்டால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திரு. பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண் வள்ளிப்பிள்ளை — 20 ரூபா.

ஈ. கிருஷ்ணசாமியின் தாய் செங்கமலம் — 20 ரூபா

எ. செல்வராசாவின் கைம்பெண் அன்னபூரணம் 5 பிள்ளைகள் — 45 ரூபா.

சி. கந்தசாமியின் கைம்பெண் செல்வமணி 4 பிள்ளைகள் — 40 ரூபா

செ. வல்லிபுரத்தின் கைம்பெண் பாக்கியம் — 20 ரூபா.

சி. ஆனந்தவேலின் கைம்பெண் மங்கையர்க்கரசி ஒரு பிள்ளை — 20 ரூபா.

க. முருகேசனின் கைம்பெண் வள்ளிபிள்ளை -4 பிள்ளைகள் —45ரூபா

வ. கனகரத்தினத்தின் பேத்தி லடசுமிபிள்ளை —10 ரூபா.

க. சிவசோதியின் கைம்பெண் செல்லபாக்கியம்-1 பிள்ளை-30 ரூபா.

வி. இளையதம்பியின் கைம்பெண் சின்னம்மா-20 ரூபா

தே. அருளபுவின் கைம்பெண் மணிமலர்-1 குழந்தை-35 ரூபா.

வே. நல்லையாவின் கைம்பெண்-2 பிள்ளைகள்-40 ரூபா.

ஆ. மார்க்கண்டுவின் கைம்பெண்-4 பிள்ளைகள்-50 ரூபா.

சி. அழகரத்தினத்தின் (16வயது) தாய் நாகரத்தினம்-1 சகோதரி 2 சகோதரர்கள்-20 ரூபா.

பலாலி

சி. சின்னத்துரையின் கைம்பெண் மரியம்மா 12 வயது மகன்-35 ரூபா பணமும்சேலை, சவர்க்காரம், தேயிலை முதலியனவும்.

சி. ஆரோக்கியத்தின் கைம்பெண் மேரி பிலோமினா-5, 4, 2, 9 மாத வயதுடைய 4 பிள்ளைகள்-75 ரூபாவும் சேலை, துணி, துவாய்கள், தேயிலை, பால உணவு, சவர்க்காரம் முதலியனவும்.

சாளபொ தியோவில் (15) வின் 15 வயது சகோதரியும் 7 வயது சகோதரனும்-35 ரூபாவும், துணி, தேயிலை, சவர்க்காரம், துவாய் முதலியனவும்.

சி. அந்தோனிப்பிள்ளையின் கைம்பெண் மேரிபிள்ளை-மி, ஒரு பிள்ளை (4)-45 ரூபாவும் துணி, தேயிலை, சவர்க்காரம், துவாய், சேலை முதலியனவும்.

ப. சாமிநாதனின் கைம்பெண் கிறிஸியம்மா-மாமி 4 பிள்ளைகள்-65 ரூபா பணமும் துணி, வேட்டி, துவாய், தேயிலை சவர்க்காரம் முதலியனவும்.

சி. செல்லத்துரையின் கைம்பெண் சிசிலியா-25 ரூபாவும் துணி, தேயிலை, சவர்க்காரம் முதலியனவும்.

சி. அந்தோனிமுத்துவின் கைம்பெண் ரஞ்சிதம்-1 பிள்ளை 35 ரூபாவும் துணி, தேயிலை, சவர்க்காரம் முதலியனவும்.

யே. யேசுராசாவின் கைம்பெண் டொமினிக்கா — 35 ரூ துணி, தேயிலை, சவர்க்காரம் முதலியன.

மா. துரைச்சாமியின் கைம்பெண் மனோன்மணி — 4 வளர்ப்பு குழந்தைகள் — 65 ரூபாவும் துணி தேயிலை,சேலை சவர்க்காரம், துவாய் முதலியனவும்.

கரைச்சி கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கரைச்சி கிராமசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு: முதலாம் வட்டாரம்: வி. ஆனந்தசங்கரி, 2ம் வட்டாரம்: பொ. சின்னப்பு 3ம் வட்டாரம்: க. வைத்திலிங்கம், 4ம் வட்டாரம்: செ. கார்த்திகேசு, 5ம் வட்டாரம்: நா. கார்த்திகேசு, 6ம் வட்டாரம்: வே. கப்பிரமணியம், 7ம் வட்டாரம்: வே. பாலசுந்தரம், 8ம் வட்டாரம்: என். கதிர்காமத்தம்பி, 9ம் வட்டாரம்: எம். அந்தோனிப்பிள்ளை, 10ம் வட்டாரம்: செ. தம்பையா, 11ம் வட்டாரம்: இ. கிருஷ்ணராஜா, 12ம் வட்டாரம்: த. அழகரத்தினம், 13ம் வட்டாரம்: வே. மார்க்கண்டு, 14ம் வட்டாரம், 15ம் வட்டாரங்களில் போட்டியில்லை. 16ம் வட்டாரம்: சி. காராளசிங்கம், 17ம் வட்டாரம்: வே. தனுஷ்கோடி.

சிறுவர் சிறுமி...

(1ம பக்கத் தொடர்ச்சி)

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் இயங்கும் அண்ணாமலை இசைத்தமிழ் கலைஞரி செயலாளர் திரு. ஆ. நமசிவாயம் தெரிவித்திருக்கிறார் நிதி உதவி அளித்த இசைக்கலைஞரி ஆசிரியர்கள் — மாணவர்கள் ஆகியோரின் பெயர்கள் வருமாறு:

வசூல் ரூபா 60-00

ஆ. நமசிவாயம்	5
எம். என். செல்லத்துரை	5
ச. பாலசிங்கம்	5
பொ. புஷ்பரத்தினம்	5
ச. இராதாதேவி	5
நா. குணபூஷணம்	1
பொ. திருமலசனி	1
செ. சிவபாக்கியம்	1
நா. நவமணி	1
இ. சௌதாமினி	1
க. சந்திரலீலா	1
ம. கிருஷ்ணவேணி	1
இ. ஞானாம்பிகை	1
ப. பிரதிபா	1
சி. தவனேஸ்வரி	1
சி. சரோஜா	1
ந. சிவசுந்தரி	1
க. கனகவதி	1
இ. புனிதவதி	1
மு. ஐஸ்வரியம்	1
கு. சதிபதேவி	1
வி. லதா	1
து. பாமினி	1
க. வரதராணி	1
த. ராஜேஸ்வரி	1
நா. மகேஸ்வரி	1
க. லலிதம்பாள்	1
சி. விஜயலட்சுமி	1
க. சூரியகுமாரி	1
இ. கனகரூபி	1
சி. மாணிக்கராஜா	1
க. கிருஷ்ணானந்தன்	1
கு. ஆனந்தகுமார்	1
க. கமலராசா	1
ச. ஸ்ரீகுகன்	1
பொ. மனோகரன்	1
ம. சந்திரகுமார்	1
ந. ஹரீந்திரன்	1
அ. ஸ்ரீகாந்தா	1
நா. முருககுமார்	1

நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மொரு புதிய தேர்தல் சட்டத்தை அமைக்கலாம்.

∴ ∴ ∴

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும். வேண்டாமென்று உதறி எறிந்த பொருள் வேண்டுமென்ற காலமும் வரும். கஷ்டம் வந்துள்ள காலையிலாவது சீயென்று காலால் ஒதுக்கி விட்ட பொருளின் அருமை தெரியவரும்.

இப்பொழுது புளியங்காய்க் காலம். கிளிஞ்சும் அணிலும் அரித்துக் கொட்டிய காய்கள் முன்பெல்லாம் யாரும் கவனிப்பாரற்றுக் குப்பையோடு குப்பையாய் போய்ச் சேர்ந்துவிடும். இன்று பழுபுளி தட்டுப்பாட்டின் காரணமாக நாட்டுப்புறங்களில் உள்ளவர்கள் மேலே விழுந்த புளியங்காய்களை ஒன்று விடாமல் பொறுக்கியெடுத்து கறிக்கு உபயோகிக்கிறார்கள். கறிக்குப்போட்டு மீதியிருப்பதைக் கூடக் கீறிக் காயவைத்து மீண்டும் பாவிக்கிறார்கள்.

புளியங்காயைப்போலவெறுத்து ஒதுக்கும் பொருட்கள் இன்னும் பலவுண்டு. அவற்றிற்கும் கஷ்டகாலம் பிறக்கும் என்று பார்த்துக்கொண்டிராமல் இப்பொழுதே அவற்றைப் பயன்படுத்தப் பழகிக்கொண்டால் பின்னுக்கு இடைஞ்சல் ஏற்படாதல்லவா?

—வழிப்போக்கன்

போட்டியின்றித் தெரிவு

நல்லூர், செவ்வாய்

ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவராக திரு சிவசம்பு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் தலைவர் தெரிவு செய்யப்பட்டார். [illegible] சமுகமளிக்கவில்லை.

இராமநாதபுரம் கொலை வழக்கு

சாவகச்சேரி, செவ்

ராமநாதபுரம் கொலை, கடத்தல் வழக்கில் சம்பந்தப்பட்ட வட்டக்கச்சியைச் சேர்ந்த ஏழு எதிரிகளில் முதலாம் எதிரி தவிர்ந்த மற்றைய ஆறு எதிரிகளையும் பிணையில் விடலாமா, கூடாதா என்று பற்றி சாவகச்சேரி மாஜிஸ்ரேட் திரு. ரெனோட் சிவலிங்கம் இன்று தனது முடிவை அறிவிப்பார். இவ்வழக்கு விசாரணையின் பின் கப்பிரீம் கோர்ட்டிற்குத் தாக்கல் செய்யப்பட்டது நேயர்கள் அறிந்ததே

இவ்வழக்கில் வட்டக்கச்சியைச் சேர்ந்த எழுவர் மீது சட்ட விரோதமாகக் கூட்டம் கூடி வைரவநாதர் ஆறுமுகம் என்பவரின் வீட்டுக்குள் நுழைந்து அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகவும் அவரது மகன் பூரணத்தைக் கடத்திச் சென்று கெடுத்ததாகவும் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

—

கதிபுரம், திங்கள்

வலி. மேற்கு கூட்டுறவு சமாஜ கல்லுண்டாய் உபபத்தில் தரிதமாக வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இக்கால போகத்தில் குறிக்கப்பட்ட வசையில் ஒரு பகுதி உப்பை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கென்னடியின் வாழ்க்கைச் சித்திரம்

யாழ்ப்பாணம், செவ்

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடியின் செல்வாக்கு நிறைந்த வாழ்க்கையையும், அந்நிமக்காட்சியையும் சித்தரிக்கும் உணர்ச்சியைத் தூண்டும் உருக்கமான சினிமாப் படம் நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க கலாசார நிலையத்தில் காட்டப்பட்டது

அமெரிக்கன் தாவிகளின் அழைப்பின்மீது ஏராளமான பிரமுகர்கள் ஆண்களும், பெண்களும் வந்திருந்தனர். சிற்றுண்டிக்குப்பின், ஆதவிகர் வரவேற்புப் பேச்சையில் பிரிட்டனின் மாவீரர் சர்வின்டன் சர்ச்சிலின் பிரிவைக் குறிப்பிட்டு சுதந்திர உலகுக்கு அவர் செய்த சேவையைப் பாராட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தினர். ஜனாதிபதி கென்னடியின் ஒரு சரித்திரங்களை பற்றி குறிப்பிட்டு, அவரது அகால மரணத்தால், தாங்கள் மிகத் துக்கமும் வெக்கமும் படுவதாயும், அவர் மறைந்தாலும், அவரது உயரிய இலட்சியங்களை அமெரிக்கா தொடர்ந்து பின்பற்றிவருவதையும் குறிப்பிட்டார்

மோர் ஒன்றரை மணிநேரம் காட்டப்படும் இப்படத்தில் கென்னடி குழந்தைகளின் விளையாட்டு, கென்னடியின் பதவி ஏற்பு, பிறநாடுகளில் உற்சாக வரவேற்பு, அவர் பேச்சுகள், உருக்கமான அந்திமக்காட்சி, வானவெளி ராக்கெட் முதலிய பல மனதில் பதியக்கூடிய அரிய காட்சிகள் அடங்கியுள்ளன.

—

சர்ச்சிலுக்கு பட்டினசபை அனுதாபம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை பட்டினசபை மறைந்த மாபெரும் ராஜதந்திரி சர். வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு அஞ்சலிசெய்யும் வகையில் அனுதாபச் செய்தி ஒன்றினை திருமதி சர்ச்சிலுக்கும், பிரிட்டிஷ் மகாராணிக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

அனுதாபச் செய்தியில் திரு சர்ச்சிலின் திறமைக்கும் ராஜதந்திரத்திற்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வேறுபாட்டை வேரறுக்கவேண்டும்'

—ராதாகிருஷ்ணன்

புதுடில்லி ஜன. 25

மொழி, மதம், இனம் ஆகிய வேறுபாடு எதுவுமின்றி ஒரே தேசமாக இந்திய மக்கள் செயலாற்றவேண்டுமென ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் குடியரசு சம்பந்தமாக இன்று வானொலியில் பேசிய போது மக்களைக் கேட்டுக்கொண்டார்.

நேரு இல்லாமல் குடியரசு தினம் கொண்டாடப்படுவது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

நேருவுக்குப் பின்னும் இந்திய மக்கள் ஒற்றுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டே வருகிறார்கள் என்றும், புதிய அரசாங்கம் நேருவின் ஆதர்சம் பெற்று துணிவு, எச்சரிக்கையுடன் செயலாற்றிவருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

—

"நிரூபித்தால் விலகுவேன்"

— முன்னாள் எம். பி.

யாழ்ப்பாணம், செவ்.

"நான் தமிழ்மக்களுக்கு விரோதமாக ஏதாவது நடவடிக்கையில் இறங்கினேன் என்பதை என் முன்னிலையில் யாராவது நிரூபித்தால் நான் இத்தேர்தலில் போட்டியிடாது வாபஸ் பெற்றுக் கொள்வேன்" என்று ஒருகூட்டத்தில் தமது தேர்தல் காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

"நான் நினைத்திருந்தால் மந்திரியாகவோ, சபாநாயகராகவோ, உயர் வேறு தனியோ அரசாங்கத்திடம் துருத்து பெற்று என்னுடைய சொந்த வாழ்க்கையைச் சிறப்பித்திருக்கமுடியும். ஆனால் நான் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக தமிழ் மக்களின் மொழிக்காகப் பாடுபடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை முன் வைத்தே உழைக்கிறேன். தமிழ் மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் எதிராக அரசாங்கம் எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் தமிழ் எம். பி.க்களுடன் சேர்ந்து எதிர்த்தே வந்திருக்கிறேன். நான் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு விரோதமாக ஒருபொழுதும் பிழைவிடவில்லை. இதனை எல்லா கட்சிக்காரர்களும் ஒத்துக்கொள்ளுவார்கள். நான், தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான அடிப்படைப் பிரச்னை தோன்றும்பொழுது தமிழ் மக்களுடன் ஒத்துழைக்கவில்லையா? தமிழ் மக்களுடைய மொழி போன்ற விஷயங்களில் அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு அரசாங்கத்திடம் ஒருக்கால் என்னென்ன உதவிகளைப் பெறமுடியுமோ அவற்றையெல்லாம் பெறுவதற்கு நான் அரசாங்கத்தை ஆதரித்தே வந்திருக்கிறேன், வேறு பலரும் பேசினர்.

—

போட்டி ஐ. நா..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தோனேஷியாமீது அமெரிக்காவும், பிரிட்டனும் தாக்குதல் தொடுத்தால் சீனா சும்மா இருக்காதென்றும் சு என்லாய் அறிவித்தார்.

மாபெரும்கூட்டம்
உடுவில் தொகுதி
தமிழரசுக்கட்சி வேட்பாளர்
திரு. வி. தருமலிங்கம்
அவர்களை ஆதரித்து
27-1-65 புதன்கிழமை
மாலை 6 மணியளவில்
சுதுமலை ஈஞ்சலோடை
வயிரவகோவில் மைதானத்தில்
பொதுக்கூட்டம் நடைபெறும்

இப்பத்திரிகை நமது நாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு [illegible] மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org